

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 133வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.9.2024) சென்னை தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



ஈரோடு தெற்கு மாவட்டம், ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழக புதிய அலுவலகத்தை ஒன்றியச் செயலாளர் வி.ராஜா தலைமையில் தெற்கு மாவட்டச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி கழகக் கொடியேற்றி திறந்து வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், பி.எல்.ஏ.2, பூத் கமிட்டி உறுப்பினர்கள் கழக உடன்பிறப்புக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கழக பவள விழாவை முன்னிட்டு - படப்பை ஆ.மனோகரன் தலைமையில்

# குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் - இலவச பொது மருத்துவ முகாம் !

### டி.ஆர்.பாலு எம்.பி.- அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கின்றனர் !

காஞ்சிபுரம் செப்:30

தி.மு.கழக பவள விழாவினை முன்னிட்டு, குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.- படப்பை ஊராட்சி தி.மு.க. மற்றும் தாகூர் பொது மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் 2.10.2024 புதன்கிழமை அன்று காலை 9:00 மணி அளவில் கே.பி.எம்.மஹால் படப்பையில் நடைபெறுகிறது.

இம் மாபெரும் மருத்துவ முகாமிற்கு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர்,குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர், ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் முன்னிலை வகிக்கிறார்.

இம் மாபெரும் மருத்துவ முகாமை கழகப் பொருளாளர்,மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி.,காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர்,சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இதில் மு.சுப்பிரமணி, வா.நந்தகோபால், ம.வாணி,வாசுகி ரமேஷ், சி. பார்த்தசாரதி, வி.ஹரி, மு.ராஜேந்திரன், மா.பரி மேலழகன்,சங்கீதா வேலு, பொன். ரமேஷ். கவி. மலர் விழி, தமிழ் அமுதன். ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், பாலகிருஷ்ணன், ஜி. ஏ. ராயப்பா, எஸ்.வைரம், தினேஷ், கந்தசாமி, ரேவதி சத்தியமூர்த்தி, வி.எஸ். கோதண்டராமன், என். இளங்கோ, பா.அறிவொளி, சுதாகர், தீபக் ராஜ், பிரகாஷ், ஆடலரசு, ஜமீர், குமரவேல், பார்த்திபன்,சையத் ரமிஸ், பொன் இளையபாரதி, பாலாஜி, மகாலட்சுமி, எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், இருசப்பன், பரசுராமன், அசோக் குமார், பஞ்சாட்சரம், வேல்முருகன், ரஞ்சித்குமார், சந்திரசேகர், குமார், வீரபாண்டியன், தமிழ்தாசன், யுவராணி,

பத்மா மாணிக்கம், மலர் மோகன், பூங்காவனம், மனோகரன், ஏழுமலை, ஆர். சிவாஜி, விஜய் கணேஷ், சசிகுமார், குமா,ர் சீனிவாசன், ரகு, பார்த்திபன், வீரபத்திரன், முரளி, முருகானந்தம், சுமன், காந்தி, ஷங்கர், ஜோதி, விஜய், கணேஷ், சீனிவாசன்,செல்வி குப்பன், சுந்தரி, குமார் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

படப்பை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ.டி.எம்.வினோத் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் படப்பை ஊராட்சி தி.மு.க. இணைந்து செய்துள்ளது.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் - சென்னை கிழக்கு மாவட்ட

# பகுதி மாணவரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

### எஸ்.மோகன் - மன்னை சோழராஜன் பங்கேற்பு! வானவில் விஜய் அறிவிப்பு!

சென்னை, செப். 30

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பகுதி மாணவரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கான நேர்காணல் வருகிற 01.10.2024 (செவ்வாய்கிழமை) நடைபெறுகிறது. இதில் மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, எஸ். மோகன், மன்னை சோழராஜன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதுகுறித்து சென்னை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் வானவில் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைகிணங்க சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதி மாணவரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் நேர்காணல் வருகிற 01.10.2024 செவ்வாய்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை ஓட்டேரி எம்.கே.டி மகாலில் நடைபெறுகிறது.

மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

கழக மாணவரணி இணை செயலாளர் எஸ். மோகன், கழக மாணவரணி துணை செயலாளர் மன்னை சோழராஜன் ஆகியோர் பகுதி மானவரணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு விண்ணபித்தவர் களை நேர்காணல் செய்கின்றனர்.

மாவட்ட கழக செயலாளர் அறிவிப்பின்படி மேற்படி பொறுப்புகளுக்கு ஏற்கனவே விண்ணபித்தவர்களும், புதிதாக விண்ணப்பிக்கவிருப்பமுள்ளவர்களும் இந்த நேர்காணலில் வயது மற்றும் கல்வி சான்றுகளுடன் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

மேற்படி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர். வானவில் விஜய் மற்றும் துணை அமைப்பாளர்கள் கு. வேணுகோபால், எஸ். பாலாஜி, எஸ். மதனருபன், எஸ்.எஸ். மணிகண்டன், அசோக் ஆண்ட்ரூஸ், மா. ஜெயலட்சுமி, ஜோஸ்வா லிவிங்ஸ்டன் ஆகியோர் செய்கின்றனர்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு,

# உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாகச் செய்திடுவீர்!

### மாவட்டச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர். கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 1-1-2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29-10-2024 அன்று வெளியிட உள்ளது. திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29-10-2024 முதல் 28-11-2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2025அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும். வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட. ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணயதளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும். பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் - 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் காலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29-10-2024

2.பெயர்களைச் சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29-10-2024 28-11-2024 .

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்.

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 6-1-2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த , சட்டமன்ற உறுப்பினர். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள். ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள். அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு மற்றும் கிளை கழக செயலாளர்கள். பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பு வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி **எஸ்.சந்திரன்** எம்.எல்.ஏ,
செயலாளர் -திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### தேனி வடக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

### கழகத்தினருக்கு - மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. வேண்டுகோள்!

தேனி, செப். 30 -

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தலைமை கழகம் அறிவிப்பின்படி தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர்நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இப்பணியினை மேற்பார்வை செய்திட கீழ் கண்டவாறு ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்டு கின்றார்கள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்

பி.டி.செல்லபபாண்டியன் மாவட்ட அவைத்தலைவர்- சின்னமனூர் மேற்கு ஒன்றியம், கே.செந்தில்முருகன் மாவட்ட துணை செயலாளர் - பெரியகுளம் வடக்கு ஒன்றியம், எம். திருக்கண்ணன் மாவட்ட துணை செயலாளர் - தேனி தெற்கு ஒன்றியம், திருமதி.நாகஜோதி அருணாசலம் மாவட்ட துணை செயலாளர்- தாமரைக்குளம் பேரூர், எஸ். சுரேஷ் மாவட்ட பொருளாளர்- பூதிப்புரம் பேரூர்,

M.சங்கர் தலைமை செயற்குழு உறுப்பினர்- தேனி நகரம், பி.முருகேசன்- போடிநாயக்கனூர் நகரம், பி. தெய்வேந்திரன தலைமை பொதுக்குழு உறுப்பினர் -வீரபாண்டி பேரூர், ஆர். ராஜ ரமேஷ தலைமைபொதுக்குழுஉறுப்பினர்- பெரியகுளம் தெற்கு ஒன்றியம்,எம் கன்னையன்- பெரியகுளம் நகரம், முனியம்மாள் முனியாண்டி தலைமை பொதுக்குழு உறுப்பினர் - தென்கரை பேரூர், ஆஜிப்கான் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்- பொ.ஆசை தம்பி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்- தேனி வடக்கு ஒன்றியம், பரணிஸ்வரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்- கெங்குவார்பட்டி பேரூர், ஜெயக்குமார் இளைஞர் அணி துணை அமைப்பாளர்- மார்க்கையன்கோட்டை பேரூர், தெய்வேந்திரன் -இளைஞர் அணி துணை அமைப்பாளர் - தேவதானப்பட்டி பேரூர்,

முத்துராம் ஜி இளைஞர் அணி துணை அமைப்பாளர்- பழனிசெட்டிபட்டி பேரூர், செல்லத்துரை இளைஞர் அணி துணைஅமைப்பாளர்- வடுகபட்டி பேரூர், S.செல்வக்குமார் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர்- மீனாட்சி புரம் பேரூர், முனியாண்டி -மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் -குச்சனூர் பேரூர், செல்வக்குமார் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் -போடிநாயக்கனூர் கிழக்கு ஒன்றியம், வி.ஆர். ராஜன் மாவட்ட அயலக அணி அமைப்பாளர்- போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றியம், எஸ்.பி.டி. ஸ்டீபன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர்- மேல சொக்கநாதபுரம் பேரூர்.

இவ்வாறு தங்கத் தமிழ்ச் செல்வன் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கலைஞர் நகர் தெற்குப் பகுதி - வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிவிப்பு!

சென்னை, செப். 30 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கலைஞர் நகர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்படி இன்று (30- 09- 24 - திங்கள் கிழமை) மாலை 6.00 அளவில் எண் 32 / 77, அண்ணா பிரதான சாலை, எம்ஜிஆர் நகர் என்ற முகவரியில் உள்ள கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில். பகுதி அவைத் தலைவர் எஸ். உமாபதி தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஏ.எம். வி. பிரபாகர்ராஜா எம். எல்.ஏ., சென்னை மாநகராட்சி கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர். இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் நண்பர் உ.துரைராஜ், மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 29.10.2024 அன்று வெளியிடபடும் வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு சம்பந்தமாக....

இவ்வாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.



தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்களை அறிவித்ததன் அடிப்படையில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் .டி.காமராஜ் தலைமையில் நேற்று தாம்பரம் சண்முகம் சாலையில் பட்டாசுகள் வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும கொண்டாடினார். உடன் ஜா.ரவிகுமார், ஆர். செல்வகுமார், எஸ்.ஜி.கருணாகரன், இரா.செல்வகுமார், ச.இராஜேஷ், எஸ்.கார்த்திக், ஸ்ரீதர் பாபு, எம். ரவிகுமார், மா.கன்னியப்பன், எல்.பெரியநயகம், எம்.விஜயன், பி.காளியப்பன், பா.ஹரிஷ், கே.எம். தாஸ், தங்கராஜ், சே.ரமேஷ், குத்துஸ் கனி, எல்.லோகநாதன், டி. துரைபாபு, முனுசாமி மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் (து) அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் வட்ட நிர்வாகிகள், மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சராக கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதையொட்டி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் எதிரில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். அருகில் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்